சமுதாயக் கல்லூரி - ஓர் அறிமுகம்

மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக் கழகம்
திருநெல்வேலி

சமுதாயக் கல்லூரி - ஓர் அறிமுகம்

மதியுதவி

முனைவர். **சா.சேவியர் அல்போன்ஸ் சே.ச.**

ஆலோசகர் - சமுதாயக் கல்லூரிகள், தமிழ்நாடு
சென்னை சமுதாயக் கல்லூரி, சென்னை – 4

நிதியுதவி

சர்தார் ராஜா

நிறுவனர்
சமுதாயக் கல்லூரி
வடக்கன்குளம்

வெளியீடு

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி
செப்டம்பர் 1998

அச்சும், வடிவமைப்பும் மாணவர் மறுதோன்றி அச்சகம்
பாரிமுனை, சென்னை - 600 001, தொலைபேசி எண்.582513

சமுதாயக் கல்லூரி - ஓர் அறிமுகம்

உள்ளே...

அணிந்துரை - துணைவேந்தர் முனைவர் க.ப. அறவாணன்

1. சமுதாயக் கல்லூரிகள் தொடக்க விழா

2. வேலை வாய்ப்பினை நல்கும் கல்வி தேவை
   2.1 வேலையில்லாத நிலை
   2.2 பள்ளியினை விட்டு விலகும் நிலை

3. வழிகாட்டும் அயல்நாட்டுச் சமுதாயக் கல்லூரிகள்
   3.1 அயல்நாட்டுச் சமுதாயக் கல்லூரிகளின் சிறப்புகள்
   3.2 தொழிலும் - கல்வியும் இணைந்து செல்லும் கல்லூரிகள்

4. தமிழகத்தில் சமுதாயக் கல்லூரிகள்

5. தென் இந்தியாவில் இயங்கி வரும் சமுதாயக் கல்லூரிகள்

6. சமுதாயக் கல்லூரியின் சிறப்புகள்

7. சமுதாயக் கல்லூரிகளின் வேறுபட்ட தன்மைகள்

8. சமுதாயக் கல்லூரிகளில் பயிற்சி வகுப்புகளின் நடைமுறைகள்
   அ. வாழ்க்கைசார் திறமைகள்
   ஆ. தொழில்சார் திறமைகள்
   இ. நேரடித் தொழில் அனுபவக்கல்வி

9. சமுதாயக் கல்லூரிகள் மக்களின் தேவை

செயல்... செயல்... செயல்...

- செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யுங்கள்
- செய்து முடிக்க வேண்டிய நேரத்திற்குள் செய்யுங்கள்
- விரும்புகிறீர்களோ இல்லையோ - செய்யுங்கள்

- எம்.ஆர். காப்மேயர்

அணிந்துரை

க.ப. அறவாணன்
துணைவேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

மானுடத்தின் இயல்பு வளர்ச்சி. வளர்ச்சிக்கு அடிப்படை மாற்றம். மாற்றம் இல்லாமல் ஏற்றம் இல்லை.

வளர்ச்சியை நோக்கிய மாற்றத்திற்குப் பல்கலைக்கழகங்கள் ஓயாமல் ஒழியாமல் வழிவகைகளைக் கண்டறிதல் வேண்டும்; செயல்படுத்துதல் வேண்டும்.

சமுதாயத்திற்குத் தேவையான, பொருத்தமான, வளர்ச்சிக்குரிய புதுமைகளைப் பல்கலைக்கழகங்கள் அவ்வப்போது செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

இவை பல்கலைக் கழகங்களின் கடமைகள்.

நம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், இந்தப் பணிகளில் எந்த நாளும் பிந்தி இருந்ததில்லை. முந்தி இருப்பதே அதன் நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டின் வெளிப்பாடே இந்த ஆண்டு முதல் அறிமுகம் ஆகும் சமுதாயக் கல்லூரிகள்.

சமுதாயக் கல்லூரிகளின் உயர்குறிக்கோள் இளைய சமுதாயத்திற்குத் தன்னம்பிக்கையை ஊட்டுவதும், மூட்டுவதும், கூட்டுவதும். தன் கைகளையே நம்ப வைப்பதும், தன் கால்களிலேயே நிற்க வைப்பதும் ஆகும்.

நம் மரபுசார் கல்லூரிப் படிப்புகள், நம் இளைஞர்களை மெய்யான உடல் உழைப்பிலிருந்தும், உற்பத்தி ஆற்றலில் இருந்தும் வெளியேற்றிக் கொண்டிருந்தன; வெளியேற்றிக் கொண்டிருக்கின்றன. உழைப்புக் குறைந்த மேசை வேலை கிட்டும் என்று ஆசை மூட்டிக் கொண்டிருந்தன; கொண்டு இருக்கின்றன. வெற்றுத்தாளில் எழுதப்பட்ட "சீனி" இனிக்காது என்பது வெளிச்சமாகிவிட்டது.

உழைப்பும், கட்டுப்பாடும், உண்மையுந்தான் தனி மனிதனையும், சமுதாயத்தையும் வளர்க்கும். இவற்றைக் கல்வி நிறுவனங்கள் கற்றுக் கொடுத்தால்தான், சமுதாயத்தில் மாற்றம் விளையும்; ஏற்றம் தழைக்கும்.

சமுதாயக் கல்லூரி அந்தத் தடத்தை நோக்கி அடியெடுத்து வைக்கிறது. அதன் பணி நீளமானது; பயணம் நீண்டது.

நல்லன வெல்லும்; வென்றே தீரும் வெற்றி உறுதி.

அன்புடன்

க.ப. அறவாணன்

1. சமுதாயக் கல்லூரிகள் - தொடக்க விழா

செப்டம்பர்த் திங்கள் 19-ஆம் நாள் 1998 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க பெருநாள். தமிழக அரசின் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குள் அமைந்த 5 சமுதாயக் கல்லூரிகளைத் தொடங்கி வைத்த சிறப்புமிக்க நன்னாள். மாண்புமிகு கல்வி அமைச்சர் தன்னுடைய உரையில் சமுதாயக் கல்லூரிகளின் தொடக்க தேவைகளைத் தெள்ளத் தெளிவாக விளக்கினார். "ஏழை எளியோருக்குக் கல்வி வாய்ப்பையும், வேலை வாய்ப்பையும் தந்து, சமுதாய மேம்பாட்டிற்கும் மனித வள மேம்பாட்டிற்கும் துணை செய்வன, இச்சமுதாயக் கல்லூரிகள். இன்றைய கல்வியே சமுதாயத்திற்காகத்தான். சமூக நீதியின் அடிப்படையில் ஏழைக்கு வாழ்வளிக்க, சமுதாயத்தில் சமத்துவத்தை நிலைநாட்டப் பயன்பட இருப்பவை இந்த சமுதாயக் கல்லூரிகள். வாழ்க்கையின் தேவையை நிறைவு செய்யத் தொழில் கற்றுக்கொள்வது என்பது இன்றைக்கு இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது. இளங்கலை அறிவியல் கல்லூரிகளில் படித்து முடித்த பட்டதாரிகள் சரியான வேலை இல்லாமல் ஏமாற்றத்தோடு அலைந்து கொண்டு இருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். சமுதாயக் கல்லூரிகள் வாழ்க்கைத் திறன்களையும், செயல் திறன்களையும் தந்து, வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன. இந்த முயற்சியை நான் முழுமையாக வரவேற்கின்றேன். கல்வி, வரைமுறைகளுக்கு அப்பாற்பட்டதாக வளர வேண்டும். பயிற்சி பெறும் முறையில் புதுமை வர வேண்டும். கல்வியில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். பல்கலைக்கழகம் இந்தப் புதிய முயற்சிகளுக்கு வழிகாட்ட வேண்டும். இந்தப் புதிய முயற்சியை தொடங்குகின்ற மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தைப் பாராட்டுகின்றேன்"

2. வேலை வாய்ப்பினை நல்கும் கல்வி தேவை

2.1 வேலையில்லாத நிலை

இந்தியாவில் 223 பல்கலைக் கழகங்கள், ஏறக்குறைய 9278 கல்லூரிகள் உள்ளன. 40 இலட்சம் மாணவர்கள் சேர்கின்றார்கள். 1992-93ஆம் ஆண்டில் கலை, அறிவியல் மற்றும் பொருளாதாரப் பாடங்களை 80% மாணவர்கள்

எடுத்துள்ளார்கள். தமிழகத்தில் உள்ள 347 கல்லூரிகளில் ஏறக்குறைய 3.26 இலட்சம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அகில இந்திய அளவில் உயர்கல்வியின் வளர்ச்சி 1991 முதல் 1996 வரை 5.1% ஆக இருந்துள்ளது. தமிழகத்தில் 6.9% ஆக இருந்துள்ளது (கல்லூரிச் செய்திக்கோவை 35(42) அக்டோபர் 20, 1997). இப்படி ஏராளமான மாணவர்கள் படிக்க அனுமதிக்கப்பட்டுக் கல்லூரிப்படிப்பினை முடித்தபோதும் தற்போது மூன்றரை கோடி பட்டதாரிகள் வேலை இல்லாதவர்களாகப் பதிவு செய்து உள்ளனர் (இந்தியா டுடே ஜுன் 1997). ஆகவே இன்றைய கல்விமுறை, வேலைவாய்ப்பினைப் பெற இயலாத ஏராளமான பட்டதாரிகளை உருவாக்குகின்றது. 18% மாணவர்கள் மட்டுமே பள்ளி முடித்ததும் கல்லூரிகளுக்குச் செல்கின்றனர். 82% மாணவர்கள் நேரடியாகத் தொழிலில் அல்லது வேலையில் இறங்கி விடுகின்றனர். இந்த நிலையில் அதற்கான தகுதியோ, திறமையோ இல்லாததால் குறைந்த சம்பளத்திலும், மோசமான பாதுகாப்பற்ற சூழ்நிலையிலும் வேலைகளில் இவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். பலருக்குக் குடும்பச் சூழ்நிலையும், எதிர்காலத் திட்டமின்மையும் இதற்குக் காரணமாகின்றன. ஆக 12 ஆண்டுகளோ, 10 ஆண்டுகளோ படித்த படிப்புக்கும் வேலைக்கும் சம்பந்தமில்லாமல் அவர்கள் மீது இவ்வேலைகள் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ சுமத்தப்படுகின்றன.

தமிழகத்தில் 1991-ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்திருப்பவர்களின் ஒரு புள்ளிவிவரம்.

மொத்தம் 20.38 இலட்சம்.

பத்தாம் வகுப்பு முடித்தவர்கள்	- 51.5% (10.5 இலட்சம்)
பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவர்கள்	- 27.4% (5.6 இலட்சம்)
இளங்கலை முடித்தவர்கள் (பி.ஏ., பி.காம்., பி.எஸ்.சி.)	- 16.7% (3.4 இலட்சம்)
டிப்ளமோ படிப்பு முடித்தவர்கள்	- 2.4% (49 ஆயிரம் பேர்)
முதுகலைப் படிப்பு முடித்தவர்கள்	- 1.9% (39 ஆயிரம் பேர்)

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கும்போது வேலை இல்லாதவர்கள் 31,54,000 பேர் (திரு. லாரன்ஸ் அறிக்கை 1993-94).

2.2 பள்ளியினை விட்டு விலகும் நிலை

தமிழகத்தில் எடுக்கப்பட்ட ஆய்வின் அடிப்படையில் 1983-ஆம் ஆண்டு முதல் 1992-93 வரை பத்தாவது வகுப்பு வரை பள்ளியில் இருந்தவர்கள் 33%. 67% பள்ளியை விட்டு விலகிச் சென்றவர்கள். 1981-82 முதல் 1992-93 வரை பன்னிரண்டாவது வகுப்பில் இருந்தவர்கள் 16% பள்ளியை விட்டுச் சென்றவர்கள் 84% (திரு. லாரன்ஸ் அறிக்கை 1993-94).

இந்த அவலநிலைக்கு அடிப்படைக் காரணங்கள் :

1. புறக்கணிக்கப்படுதல், விலக்கப்படுதல், நம்முடைய கல்வி முறையில் ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரை எப்பொழுதும் புறக்கணிக்கப் படுகின்ற நிலைமையே நிலவி வருகின்றது (Exclusion and Elimination)
2. வேலை வாய்ப்புகளுக்கும், செயல்திறன்களுக்கும் தொடர்பு இல்லாத நிலை (Mismatch Between Education and Employment)

வேலையின்மையின் காரணமாகவும் பள்ளியிலிருந்து விலகிச் செல்லக்கூடிய கட்டாயத்தாலும், ஆயிரக்கணக்கான இளைஞர்களும், இளம்பெண்களும், திறன்கள் இல்லாமல், நம்பிக்கை இழந்து இருக்கக்கூடிய சூழலில், இச்சமுதாயக் கல்லூரிகள் அவர்களுக்கு நம்பிக்கை தரும் பயனுள்ள தொழிற்கல்வியைத் தருகின்றன. இந்த மாற்றுப்பாதையின் அவசியத்தையும், தேவையையும் சென்னை சமுதாயக் கல்லூரியினை 1996 ஜூன் 1-ம் நாள் ஆரம்பித்தபோது சென்னை மயிலை பேராயர் பத்திரிக்கை நிருபர்களிடம் கூறினார். "கத்தோலிக்க நிறுவனங்கள் இந்தியாவில் கல்வி வளர்ச்சியில் முன்னோடியாகத் திகழ்கின்றன. ஆரம்ப, உயர்நிலை, மேல்நிலைக் கல்வி நிறுவனங்கள் பலவற்றைச் சென்னையிலும், அதன் சுற்றுப்பகுதியிலும் பல ஆண்டுகளாக நடத்திவருகின்றன. நூறு ஆண்டுகட்கு மேலாக அந்த நிறுவனங்களை வளர்க்கவும் மேம்படுத்தவும் எல்லாவிதமான அணுகுமுறைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதுவரை அவற்றின் பாதை வளர்ச்சியில் சென்றுகொண்டு இருந்தாலும் எதிர்நோக்கியுள்ள உலகின் பல்வேறு மாற்றுச்சூழல்களில் புதிய பாதையைத் தேர்வு செய்திட வேண்டிய தேவை தற்போது உருவாகிவிட்டது. ஏராளமான வேலையில்லாத

பட்டதாரிகளைத் தினம் தினம் காணுகின்றபோது என்னால் இந்த மாற்றுச் சமுதாயக் கல்லூரிகளின் அவசியத்தை உணர முடிகிறது. இத்தகைய சமுதாயக்கல்லூரி நிறுவனங்கள் நமது எல்லாப்பகுதிகளிலும் குறிப்பாகக் கிராமப்புறப் பகுதிகளிலும் செயல்பட வேண்டும்."

3. வழிகாட்டும் அயல்நாட்டுச் சமுதாயக் கல்லூரிகள்

அமெரிக்காவில் சமுதாயக் கல்லூரிகள் நமக்கு ஒரு வழிகாட்டியாகவும், முன்மாதிரியாகவும் உள்ளன 52% மாணவர்கள் 1400 அமெரிக்கச் சமுதாயக் கல்லூரிகளில் கல்வி கற்கின்றனர். இதில் 95% மாணவர்கள் படிப்பு முடிந்தவுடன் வேலை வாய்ப்பினைப் பெற்று வருகின்றனர்.

3.1 அயல்நாட்டுச் சமுதாயக் கல்லூரிகளின் சிறப்புகள்

- எல்லா வயதினருக்கும் ஏற்றது. உதாரணமாக 19 முதல் 75 வயது வரை கற்கின்றார்கள்.
- அடிப்படைக் கல்வி முதல் உயர்தரக் கல்விவரை உள்ளது.
- மாணவர்களை மையமாக வைத்த கல்விமுறை, கூடுதலாக மொழிகள், அடிப்படை அறிவியல், கணிதம் போன்றவையும் கற்பிக்கப்படுகின்றன.
- சாதாரணமாகக் கல்லூரிப்படிப்புக்கு ஆண்டுக்கு 10.954 அமெரிக்க டாலர் செலவாகும். ஆனால் சமுதாயக் கல்லூரிகளில் ஆண்டுக்கு 1,114 டாலர்தான் செலவாகின்றது.

3.2 தொழிலும் - கல்வியும் இணைந்து செல்லும் கல்லூரிகள்

- பகுதி நேர ஆசிரியர்களாக தொழில் நிறுவனங்களிலிருந்து வல்லுநர்கள் வரவழைக்கப்படுகின்றனர்.
- கல்லூரிக்கான ஆலோசனைக் குழுக்களில், தொழில்துறை, சமூகத்துறை, வணிகத்துறையின் பிரதிநிதிகள் இடம் பெறுகின்றனர்.
- மாணவர்கட்குக் கல்வி கற்கும்போதே போதுமான தொழில் அனுபவங்கள் அருகில் உள்ள தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் மூலம் கிடைக்கின்றன.

4. தமிழகத்தில் சமுதாயக் கல்லூரிகள்

அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து சமுதாயக் கல்லூரிகள் பற்றிய தெளிவும், அனுபவமும் நமக்கு ஏற்பட்டாலும் நமது சமுதாய அரசியல் பொருளாதார கல்விச் சூழலுக்கு ஏற்ப, நாமே வடிவமைத்த சமுதாயக்கல்லூரிகள் இன்று தென் இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றன.

பின்வரும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன :

* பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம். முடித்த மாணவர்கட்கு ஓராண்டு டிப்ளமோப்படிப்புகள் நடத்தப்படுகின்றன.
* +2 முடிந்தவர்கட்கும், பத்தாண்டு உயர்நிலைக்கல்வி முடித்தவர்கட்கும், ஓராண்டு டிப்ளமோப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.
* +2 முடித்தவர்கட்கு, பட்டப்படிப்போடு டிப்ளமோக்கள் வழங்கும் கல்விமுறை செயல்படுகிறது.
* பள்ளியிலிருந்து இடையிலேயே விலகிச்சென்ற மாணவர்கட்குச் சான்றிதழ் அளவில் தொழிற்பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

5. தென் இந்தியாவில் இயங்கி வரும் சமுதாயக்கல்லூரிகள்

கனரா சமுதாயக் கல்லூரி, மங்களூர்	- 1993
புதுவைப் பல்கலைக்கழக சமுதாயக்கல்லூரி	- 1995
சென்னை சமுதாயக் கல்லூரி	- 1996
மதுரை சமுதாயக் கல்லூரி	- 1997
கன்னியாகுமரி சமுதாயக் கல்லூரி, மார்த்தாண்டம்	- 1997
மெல்ரோஸாபுரம் கிராமிய சமுதாயக்கல்லூரி, சென்னை	- 1998
புனித அன்னாள் சமுதாயக் கல்லூரி, மேலப்புதூர், திருச்சி	- 1998
அவினாசிலிங்கம் பல்கலைக்கழக சமுதாயக்கல்லூரி, கோயம்புத்தூர்	- 1998
இமாகுலேட் சமுதாயக் கல்லூரி, கடலூர்	- 1998

இந்தக் கல்லூரிகள் எல்லாம் இயங்கிக் கொண்டிருந்தாலும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி முதன் முறையாக இந்தச் சமுதாயக் கல்வி முறையை மாற்றுக்கல்வி முறையாக ஏற்றுக்கொண்டு 5 சமுதாயக் கல்லூரிகளுக்கு அனுமதி அளித்து, இந்தியக்கல்வி வரலாற்றில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி இருக்கின்றது. இந்தக் கல்லூரிகள் பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்குட்பட்டுச் சுயநிதிக் கல்லூரிகளாக ஆண், பெண் இருபாலருக்கும் சேவை செய்கின்ற வகையிலே அமைக்கப்பட்டு செப்டம்பர் திங்கள் 19-ஆம் நாள் 1998-ஆம் ஆண்டு அன்று பல்கலைக்கழக வளாகத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அந்தச் சமுதாயக் கல்லூரிகள் பின்வருமாறு :

என்.ஐ. சமுதாயக் கல்லூரி, குமாரகோவில்
சர்தார் ராஜா சமுதாயக்கல்லூரி, வடக்கன்குளம்
பாளையங்கோட்டை சமுதாயக்கல்லூரி, பாளையங்கோட்டை
ராஜீவ்காந்தி சமுதாயக் கல்லூரி, மேலகரம்
ஸ்காட் சமுதாயக்கல்லூரி, சேரன் மாதேவி

இக்கல்லூரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற வேலை வாய்ப்பிற்கான டிப்ளமோ படிப்புகள்.

1. கணினி நுட்பவியல்
2. அச்சுத் தொழில்நுட்பவியல்
3. நான்கு சக்கர வாகன நுட்பவியல்
4. பல்நோக்குக் கிராமிய வளர்ச்சி உதவியாளர்
5. பெண் செவிலியர் உதவியாளர்
6. சரக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிர்வாகவியல்
7. வியாபாரம் மற்றும் விற்பனை நிர்வாகம்
8. இரு சக்கர வாகன நுட்பவியல்
9. மழலையர் ஆசிரியர் பயிற்சி

6. சமுதாயக் கல்லூரியின் சிறப்புகள்

- சமுதாயக் கல்லூரி வேலை வாய்ப்பினை, செயல்திறனை, தொழில் பயிற்சியினை அடிப்படையாகக் கொண்டு தரமான கல்வி முறையை வழங்குகின்ற கல்லூரி.

- செயல் திறன்களையும், வேலை வாய்ப்புகளையும், இணைக்கின்ற பாலமாக விளங்குகின்ற வேலை வாய்ப்புக் கல்லூரி.

- புறக்கணிக்கப்பட்ட, விடுபட்ட இளைய சமுதாயத்திற்கு நம்பிக்கை தரும் கல்லூரி (Including the Excluded)

- பொருளாதாரத்திலும், படிப்பிலும், சமூக நிலையிலும், பிற்படுத்தப்பட்ட, ஒரத்திற்குத் தள்ளப்பட்ட கிராம மக்களுக்கு வாய்ப்புத் தருகின்ற கல்லூரி (Giving the best to the least)

- சுய வேலை வாய்ப்புகளை இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு உருவாக்கித் தருகின்ற கல்லூரி.

- ஏழை மாணவன் அல்லது மாணவிக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குவதன் மூலமாக அந்தக் குடும்பத்தை ஏழ்மையின் பிடியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதை நிரூபிக்கும் கல்லூரி.

- மனிதவள மேம்பாட்டைப் பெருக்குகின்ற வகையிலே அந்த அந்தப் பகுதிகளின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்ற கல்லூரி.

- தரமான தொழிற் கல்வியினை யாரெல்லாம் விரும்புகின்றார்களோ அவர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் நிறைவாகத்தரும் கல்லூரி (Access, Equal opportunity and Cost Effectiveness).

- வயது வரம்பில்லாமல் விரும்புவோர்க்கெல்லாம் தொழிற்கல்வியினைத் தருகின்ற மக்கள் கல்லூரி.

* தொழிலகங்களோடும் வர்த்தக நிறுவனங்களோடும் நெருங்கிய தொடர்புகொண்டு பயிற்சிதருகின்ற கல்லூரி - தொழிலக வர்த்தக நிறுவனத்தைச் சார்ந்த நிபுணர்கள் பாடத்திட்டத்தை வரைவதிலும், பாடங்களைக் கற்பிப்பதிலும், கல்லூரியின் ஆலோசனைக் குழுக்களில் அங்கத்தினர்களாகச் செயல்படுவதிலும், மாணவர், மாணவியரை தொழிலகங்களுக்கு அழைத்துச் சென்று பயிற்சி கொடுப்பதிலும், அவர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தருவதிலும், சிறப்பாகச் செயல்படுகின்றார்கள்.

7. சமுதாயக் கல்லூரிகளின் வேறுபட்ட தன்மைகள்

இச்சமுதாயக் கல்லூரிகள் மற்ற கல்லூரிகளில் இருந்து பலவகையில் வேறுபடுகின்றன.

1. பொதுவான ஒரு கல்வியை வழங்காமல் குறிப்பிட்ட ஒரு துறையில் தேர்ந்த, நிறைவான பயிற்சியை வழங்குகின்றன.

2. மாணவர்களது அறிவையும், திறமையையும் நேரடியாகப் பயன்படுத்தி அதன்மூலம் அனுபவ அறிவை வழங்குகின்றன.

3. சமுதாயக் கல்லூரிகள் நேரடியாக எல்லோருக்கும் வேலைவாய்ப்பு வழங்க உத்தரவாதம் தர இயலாவிட்டாலும் இங்குப் பயிலும் மாணவர்கட்கு வேலை கட்டாயம் கிடைக்கும் என்ற வழிவகைகளைக் காட்டுவதோடு பலர் சுயமாகத் தொழில் செய்யவும் வழிகாட்டுகின்றன.

சமுதாயக் கல்லூரியின் தொலை நோக்கு :

சமுதாயத்தில், பொருளாதாரத்தில், கல்வியில் பின்தங்கிய ஏழை எளியவர்களுக்குத் தொழிற்கல்வி அளித்து மனிதவள மேம்பாட்டுக்கும் ஏழ்மையினைப் போக்குவதற்கும் கருவிகளாக விளங்குதல்.

8. சமுதாயக் கல்லூரிகளின் பயிற்சி வகுப்புகளின் நடைமுறைகள்

ஓராண்டு டிப்ளமோ பயிற்சி
மொத்த பயிற்சி நேரம் = 48 வாரங்கள் = 720 மணி நேரங்கள்
1 வாரத்திற்கு 15 மணி நேரங்கள் = 5 நாட்கள்

அ) வாழ்க்கைசார் திறமைகள்		வகுப்புகள் நடத்தப்பட வேண்டிய நேரங்கள்
1.	வாழ்க்கையை புரிந்து கொள்ளல் மற்றும் நம்பிக்கையோடு செயல்படல்	60 மணிநேரம்
2.	பிறருடன் சிறந்த முறையில் தொடர்பு கொள்ளுதல் மற்றும் சுய ஆற்றலை வளர்த்தல்	60 மணி நேரம்
3.	கம்ப்யூட்டரை இயக்குதல் மற்றும் பயன்படுத்துதல்	60 மணி நேரம்
4.	ஆங்கிலம் பேசுதல் மற்றும் எழுதுதல் ஆகியவற்றில் தேர்ச்சியடைதல்	90 மணி நேரம்

ஆ) தொழில்சார் திறமைகள்

குறிப்பிட்ட துறையில் ஆழமாகப் பயிற்சி பெறும் வகையில் ஐந்து பாடங்கள், ஒவ்வொன்றும் 60 மணி நேரமாக வழங்கப்படுகின்றது.

- 300 மணி நேரங்கள், பயிற்சியும் மதிப்பீடுகளும் நடத்தப்படுகின்றன.

இ) நேரடித்தொழில் அனுபவக்கல்வி

120 மணி நேரங்கள் தொழில் நிறுவனத்திற்குச் சென்று அங்குப் பணி புரிதல். வேலையின் நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ளுதல்.

30 மணிநேரங்கள் நேரடித் தேர்வுக்காகப் பயிற்சி பெறுதல்.

9. சமுதாயக் கல்லூரிகள் மக்களின் தேவை

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1997 ஆகஸ்டு மாதம் 11-ஆம் நாள் அன்றைய துணைவேந்தர் டாக்டர் பொன்னுசாமி தலைமையில் ஒரு கருத்தரங்கம் இத்தகு சமுதாயக்கல்லூரி முறைகளைப்பற்றி ஆய்ந்தறிய நடந்தது. அதில் அமெரிக்கா, இங்கிலாந்து நாட்டின் சமுதாயக் கல்லூரிப் பேராசிரியர்கள் பலரும் கலந்து கொண்டு, இத்தகைய கல்விமுறை இன்றைய தேவை என்பதை வலியுறுத்தினார்கள். இந்து பத்திரிக்கையின் தொழில்துறைப் பகுதி ஆசிரியர் டாக்டர். சுவாமிநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

"சமுதாயக் கல்லூரிகள் மக்களோடு இணைந்து செல்லும் ஒன்றாக இராது, மக்களின் தேவைகளில் ஒன்றாகி விடவேண்டும். வெறும் பட்டத்தை வழங்கி, மாணவர்களை அறிவில் மட்டும் சிறந்தவர்களாக்குவதை விடுத்து, அனுபவ ரீதியில் தங்கள் கல்வியைப் பயன்படுத்திச் செயல்படுத்திட, கற்கும்போதே வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். இது அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

இன்றைய தொழில் நிறுவனங்கள் இதையே எதிர்பார்க்கின்றன. இத்தகைய முறையில் கல்வி வழங்கிடக் கிராமங்கள் முதல், நகரங்கள் வரை, வேலைவாய்ப்பிற்கு ஒரு பெரிய பாலத்தை உருவாக்கி, வேலைவாய்ப்பினை வழங்கி, நாளைய நமது சமுதாய இளைஞர்களின் வாழ்வில் நம்பிக்கை ஊட்டும் என்பதில் ஐயமில்லை!"

உழைப்பு ஓங்க
பிழைப்பு ஓங்கும்
உண்மை ஓங்க
வண்மை ஓங்கும்

வெற்றி என்பது

எது பலன் தராது
என்பதைக் கண்டு பிடிப்பது
எது பலன் தரும்
என்பதைக் கண்டு அறிவது